## தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - 2013

தேசிய நெடுஞ்சாலைகள் துறைச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைசாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 14 ஆந்திகதிய 2767 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்குதி

செயற்திட்ட உடன்படிக்கையின்படி, துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பற்துறை அமைச்சு (எம்ஓஎச்பி&எஸ்) மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (ஆர்டிஏ) என்பன முறையே செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. ஏறத்தாழ 62 கிமீ தேசிய நெடுஞ்சாலைகளின் புனரமைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தலில் தரமுயர்த்தல் மூலம் வினைத்திறனான தேசிய போக்குவரத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 13,728 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 105.60 மில்லியனானதுடன் அதில் ரூபா 11,050 மில்லினிற்கு சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. இச் செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2006 திசெம்பர் 14 ஆந் திகதிய 2767 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகள் துறை செயற்திட்டம் என அழைக்கப்படும் அதேநோக்கமுள்ள செயற்திட்டத்திற்காக மேலதிக நிதியினை வழங்குவதற்கு அமுலாக்கப்படுகின்றது. இந்த இரண்டு செயற்திட்டங்களும் ஒரே செயற்திட்ட கண்காணிப்பு கூறினால் (பிஎம்யூ) நிர்வகிக்கப்படுகின்ற போதிலும் உரிய செயற்திட்டங்களின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க

மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணககுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 4,264 மில்லியனாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 6,043 மில்லியனாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பொன்றை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| **விபரம்** | **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **2013** | **2012** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| நிலையான சொத்துக்கள்-கிரயத்தில் | 828,716 | - | 828,71 |
| நிர்மாண நடைபெறும் வேலைகள் | 1,836,241,596 | 443,079,828 | 2,276,321,424 |
| ஆலோசனைக் கிரயம் | 204,667,909 | 262,146,880 | 466,814,789 |
| காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் கிரயம் | 1,145,172,006 | 1,165,137,791 | 2,310,309,798 |
| செயற்திட்ட கண்காணிப்பு கூறின் செலவினம் | 76,119,866 | 4,230,277 | 80,350,143 |
| கடன் வட்டி | 20,038,696 | 17,400,545 | 37,439,241 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 980,583,810 | (109,652,275) | 870,931,535 |
| மொத்தம் | 4,263,652,599 | 1,779,343,046 | 6,042,995,646 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிலுள்ள மீதி என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | ரூபா | ரூபா | ஐ.அ.டொலர் |
|---|---|---|---|
| 2013 சனவரி 31 இல் உள்ளவாறான மீதி | 1,394,244 | | 177,293,152 |
| கூட்டு:- மீள் நிரப்பல்கள் | 1,550,681 | 203,485,350 | |
| வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | | 1,189,928 | |
| | | | 204,675,278 |
| | 2,944,925 | | 381,968,430 |
| கழி:- பற்றுதல்கள் | 2,455,673 | | 317,997,319 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 489,252 | | 63,971,111 |

## 4.3 கடன் நிபந்தனை

கடன் உடன்படிக்கையின் 03 ஆம் பட்டோலையின் 06(பீ) ஆம் பிரிவின் பிரகாரம், ஆசிய அபிவிருத்தி வங்கியானது இலங்கை மத்திய வங்கியில் கட்டுநிதி கணக்கொன்றை உருவாக்குவதற்கு உடன்பட்டிருந்தது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியானது கடன் பண அளிப்பு கையேட்டிற்கும் கடன்பெறுவோருக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் அவற்றின் மீதான விரிவான ஒழுங்கமைப்பிற்கும் இணங்க தகுதியுடைய செலவினங்களின் மீளளிப்பிற்காக செலவின நடைமுறைக் கூற்றினை பிரயோகிப்பதற்கு உடன்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட ஒழுங்கமைப்பின் பிரகாரம், மீளளிக்கப்பட வேண்டிய தனித்தனியான கொடுப்பனவு ஐ.அ.டொலர் 100,000 ஐ விஞ்சியிருக்க கூடாது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது 09 சந்தர்ப்பங்களில் உரிய எல்லையை விஞ்சியிருந்தன.

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்ட ரூபா 185,991,091 பெறுமதியான வேலைகள் தொடர்பான அட்டுறு செலவினத்திற்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்குவதற்கு வேண்டப்பட்ட சில தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்தின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பாவனை மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| | கடன் உடன்படிக்கையில் வழங்குவதற்கு உடன்பட்ட தொகை | | 2013 வருடாந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை | மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப் பட்ட தொகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா. (மில்) | ரூபா. (மில்) | ரூபா. (மில்) | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா. (மில்) |
| ஏடிபி | 85.00 | 11,050 | 2,526 | 2,526 | 28.32 | 3,723* |
| இலங்கை அரசாங்கம் | 20.60 | 2,678 | 1,139 | 1,139 | 17.85 | 2,321* |
| மொத்தம் | 105.6 | 13,728 | 3,665 | 3,665 | 46.17 | 6,044 |

* 2767 ஆம் இலக்க முந்திய ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உடன்படிக்கையின் கீழ் காணிச் சுவீகரிப்பு, அளவைகள், பயன்பாட்டு மாற்றங்கள் என்பவற்றில் ஏற்பட்ட கிரயம் இச் செயற்திட்டத்தின் கிரயத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**6.2. ஒப்பந்த நிர்வாகம்**

**6.2.1 வீதி முன்னேற்றங்கள்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளின் கீழ் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட வீதி முன்னேற்றங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **வீதி** | **நீளம்** | **ஒதுக்கப்பட்ட தொகை** |
|---|---|---|
| | **கிமீ** | **ரூபா மில்லியன்** |
| ஏ24 மாத்தறை – கொடகம | 3.40 | 671 |
| பீ 153 ஹிக்கடுவ- தெற்கு நெடுஞ்சாலை | 14.34 | 1,378 |
| பீ 157 அளுத்கம- தெற்கு நெடுஞ்சாலை | 11.07 | 1,892 |
| பீ 207 கட்டுகுறுந்தை- நாகொடை | 2.72 | 388 |
| ஏ 004 கிருலப்பனை- கொடகம | 13.3 | 1,400 |
| பீ 084 பாமன்கடை – கெஸ்பேவ | 12.76 | 3,721 |
| மொத்தம் | 57.59 | 9,450 |

6.2.2 மேற்குறிப்பிட்டவற்றில், பீ 207 கட்டுகுறுந்தை- நாகொடை வீதி மற்றும் பாமன்கடை- கேஸ்பேவ வீதியின் வீதி முன்னேற்ற வேலைகளில் மாதிரி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பீ 207 கட்டுகுறுந்தை- நாகொடை வீதியின் வீதி மேம்படுத்தல் வேலைகள் 2012 மே 25 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆகஸ்ட் 17 இற்கு முன்னர் பூர்த்தியாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆலோசனையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின்படி, வீதி முன்னேற்றங்களின் பௌதீக முன்னேற்றம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 89 சதவீதத்தில் இருந்தது. இது தொடர்பில் மேலும் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னேற்ற அறிக்கைகளின்படி, வீதி முன்னேற்ற வேலைகளின் ஆரம்ப கட்டத்தில் ஒப்பந்தகாரரின் செயலாற்றல் மிகவும் குறைவாக இருந்ததுடன் 2013 யூன் 30 இற்கு முன்னர் பூர்த்தியாக்க வேண்டிய பல ஆரம்ப வேலைகளான கிண்டுதல், வேலைத்தளம் துப்பரவாக்கல் மற்றும் அகழ்வு வேலைகள் நீண்ட தாமதததின் பின்னர் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. மேலும், தடுப்பு சுவர்களின் நிர்மாணம் மற்றும் ஒழுங்கான இடைவெளியில் அஸ்பற் பிரயோகித்தல் போன்ற அத்தகைய பல வேறு வேலைகளின் வேலை நிகழ்ச்சித்திட்டம் மேற்குறிப்பட்ட தாமதம் காரணமாக திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 மார்ச் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்க வேண்டிய அத்தகைய திருத்த வேலை நிகழ்ச்சித்திட்டம் 2013 திசெம்பர் 31 வரையும் கூட பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. பயன்பாட்டு மாற்றங்கள், குழாய் அமைத்தல், காணி சுவீகரிப்பு என்பவற்றிலுள்ள தாமதங்கள் 2015 ஏப்ரல் வரை பூர்த்தியாக்கல் திகதியை நீடிப்பதனை விளைவித்திருந்தது.

(ii) திருத்தப்பட்ட மதிப்பீடுகள் மிருதுவாக்கிய நில சுத்திகரிப்பு வேலைகள், பயன்பாட்டு மாற்றங்கள் மற்றும் அளவீட்டுப் பட்டியலிலுள்ள குறிப்பிடத்தக்க விடங்களின் குறைமதிப்பீடு போன்றன காரணமாக ஒப்பந்த்த்தின் கிரயத்தில் குறிப்படத்தக்களவு அதிகரிப்பை காட்டுகிறது. ரூபா 346 மில்லியனிரிருந்து ரூபா 400 மில்லியன் வரை ஒப்பந்த கிரயம் அதிகரிப்பதை எதிர்வுகூறும் திருத்தப்பட்ட கிரயத்தை தயாரித்து 2014 மார்ச் 06 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கெஸ்பேவ- பாமன்கடை வீதியின் முன்னேற்ற வேலைகள் 2013 மார்ச் 28 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2015 மார்ச் 28 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆலோசனையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் படி, வீதி முன்னேற்றத்தின் பௌதீக முன்னேற்றம் அத்திகதியில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கான 14.88 சதவீதத்திற்கு எதிராக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13.14 சதவீதமாக இருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆகஸ்ட் 07 இன் 2/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின்படி கசல கொள்வனவுகளிற்குமான மதிப்பீடுகள் மொத்த கொள்வனவு கிரயத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக சகல விடயங்களையும் கருத்திற்கொள்வதன் மூலம் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 660.9 மில்லியன் தொகையான இரண்டு வீதிப்

பிரிவுகளின் புனரமப்பு வேலைகள் மற்றும் ரூபா 95 மில்லியன் தொகையான பாமன்கடை பாலத்தின் கிரயம் என்பன ஆரம்ப மதிப்பீடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய பாலத்தின் கிரயத்தை மதிப்பிடாமல் இரத்தினப்பிட்டிய புதிய பாலம் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமை தகராறுகளை உருவாக்குவதற்கும் செயற்திட்டத்திற்கு பதாகமான விளைவுகளிற்கும் வழிவகுக்கும் என அவதானிக்கப்பட்டது. மேலும், அத்தகைய நோக்கெல்லை முரண்களிற்காக அமைச்சரவையால் நிமிக்கப்பட்ட கேள்விச் சபையிடமிருந்து (சீஏரீபீ) அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆரம்பநிலை மற்றும் பொதுவான விடயங்கள் மீதான மொத்த தொகை கொடுப்பனவுகளிற்கான பொறியியலாளருடைய மதிப்பீடுகள் ரூபா 145.33 மில்லியன் தொகையாக இருந்த போதிலும் ஒப்பந்தகாரர் அத்தகைய வேலைகளிற்காக ரூபா 256 மில்லியன் தொகையை குறிப்பிட்டிருந்தார். எவ்வாறாயினும், ஒப்பந்தகரருடைய மதிப்பீட்டை அங்கீகரிக்க முன்னர் வீதப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 ஒக்தோபர் 01 இல் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்த போதிலும் புனரமைப்பு வேலைகளின் கட்டம் 1 இற்காகன வேலைத்தளத்தின் உடமையை 06 மாதகால தாமதத்தின் பின்னர் 2013 மார்ச் 25 இல் கையளிக்கப்பட்டிருந்தது. மேலும், வீதியின் கட்டம் 2 இற்கான (பிரிவு 1+150 கிமீ முதல் 10+450 கிமீ வரை) வேலைத்தள உடமையை இரண்டு மாதகால தாமதத்தின் பின்னர் 2014 மே 20 இல் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. பொறியியலாளரால் தயாரிக்கப்பட்ட திருத்திய அளவீட்டுப் பட்டியலின்படி, புனரமைப்பு வெலைகளின் கிரயம் புனரமைப்பு வேலைகளின் ஆரம்பிப்பிலுள்ள தாமதம் காரணமாக ஆரம்ப வேலைகள் மற்றும் பொதுவான விடயங்களிற்காக ரூபா 30.36 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(iv) ரூபா 249.19 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணத்தின் இரண்டாவது தவணைப்பணம் 2013 பெப்ரவரி 19 இல் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரர் தொழிலாரம்பிப்பு முதலாவது தவணைப்பணம் விடுவித்ததிலிருந்து 3 ½ மாதங்கள்

தாமதத்தின் பின்னர் 2013 மார்ச் 28 இலேயே வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது. விசேட ஒப்பந்த உபபிரிவின் 14.2(ii) ஆம் பந்தியின் படி, ஒப்பந்தகாரர் தொழிலாரம்பிப்பு இரண்டாவது தவணைப்பணக் கொடுப்பனவுகள் விடுவிப்பதற்கு முன்னர் தொழிலாரம்பிப்பதிலிருந்து வேண்டப்பட்டது.

(v) ஒப்பந்தத்தின் விசேட நிபந்தனைகளின் 14.6 ஆம் பந்தியின் படி, இடைக்கால கொடுப்பனவின் ஆகக்குறைந்த பெறுமதி ரூபா 66.4 மில்லியனிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட 9 சந்தர்ப்பங்களில், 7 சந்தர்ப்பங்களில் செய்யப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவுகள் வேண்டப்பட்ட ஆகக்குறைந்த எல்லைலையை எட்டியிருக்கவில்லை.

(vi) ஒப்பந்த நிபந்தனையின் படி, வேலைத்தளத்தில் பொருட்கள் மீதான முற்பணங்களின் 80 சதவீதம் உரிய விலைப்பட்டியலை மெய்மையாய்வு செய்த பின்னர் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 49.90 மில்லியன் தொகையான அத்தகைய முற்பணங்கள் ஆவணச்சாற்றுகளை மெய்மையாயடவு செய்யாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(vii) ஐசீரீஏடி எஸ்சீஏ 5 இன் 106 ஆம் விதியின் படி, இடைக்காலக் கொடுப்பனவுகள் செய்யப்பட்ட வேலைகளை அளவீடு செய்யத பின்னர் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 76.74 மில்லியன் தொகையான இடைக்கால கொடுப்பனவுகள் பௌதீக அளவீடுகளின் ஊடாக வேலைகளை மெய்மையாய்வு செய்யாமல் 2013 நவம்பர் மாதத்தில் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 18.64 மில்லியன் தொகையான அவற்றில் உள்ளடக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகள் 2013 திசெம்பர் மாதத்தில் அறவிடப்பட்டிருந்தது.

(viii) மீளாய்வாண்டு இறுதியில் ஒப்பந்தகாரரால் கள ஆய்வுகூடமொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 7.82 மில்லியன் கிரயமான ஆய்வுகூடஉபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மேலும், ரூபா 2.2 மில்லயன் மேலதிக தொகை கள ஆய்வுகூடம் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பிற்காக அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரரால் பேணப்படும்

ஆய்வுகூடத்திற்காக ரூபா 7.82 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தகாரரால் கொள்வனவு செய்யப்பட்ட பரீட்சித்தல் உபகரணங்கள் ரூபா 85 மில்லியன் தொகையான இலாபம் மற்றும் மேந்தலைகள் போன்றவற்றிக்காக 10 சதவீத இலாப எல்லை உள்ளடக்கியிருந்தது. அளவீட்டுப் பட்டியலின் படி, ரூபா 5.27 மில்லியன் தொகையான ஒதுக்கீடு ஆய்வுகூட உபகரணங்களின் கொள்வனவு மற்றும் ஆலோசனையாளருக்கான புறம்பான ஆண்வுகூடத்தின் பராமரிப்பு என்பவற்றிற்கு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீதி வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்ட பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு அவை உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) ஒப்பந்தகாரரால் முழுச் செயற்திட்ட காலத்திற்காகவும் சகல ஆபத்தக்களிற்கான காப்புறுதி மேவுகை பெறப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரால் வருடாந்த அடிப்படையில் பல்வேறு கட்டங்களிற்காகவும் புறம்பான காப்புறுதி மேவுகை பெறப்பட்டிருந்தது. ஆகவே, ஒப்பந்தகாரரால் பெறப்பட்ட மேவுகை மற்றும் செலுத்தப்பட்ட தவணைப்பணம் என்பவற்றை மெய்மையாய்வு செய்வதற்குப் பதிலாக மொத்த தொகை அடிப்படையில் காப்புறுதியாக ஒப்பந்தகாரரிற்கு ரூபா 10 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், தொழிலாளருடைய இழப்பீட்டிற்கான காப்புறுதி மேவுகை சகல ஊழியர்களிற்காகவும் பெறப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 300 தொழிலாளர் அணியின் சராசரி வேலையின் காப்புறுதி மேவுகையை பெறுவதற்குப் பதிலாக, தற்காலிக மேவுகை அல்லது குறுகிய காலங்கள் 51, 94, 106 தொழிலாளர்கள் போன்ற அத்தகைய உரிய காலத்தின் போது இருக்கின்ற பதவியணிக்காக பெறப்பட்டிருந்தது.

## 6.3 சர்ச்சைக்குரிய விடயங்கள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பாமன்கடை– கெஸ்பேவ வீதி முன்னேற்றத்தின் கீழ் வேலை நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்காத வெதற மாற்று வீதியின் ஆரம்ப திட்டம் தயாரிப்பதற்காக செயற்திட்டத்தால் ரூபா 100,000 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஹொரண- கொழும்பு வீதிக்கு இடையில் பில்லேவா கோயிலுக்கு அருகிலுள்ள காணியில் வசித்திருந்த 27 அத்துமீறிய குடியிருப்பாளர்களிற்கு இழப்பீடாக ரூபா 4,860,000 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காத மோட்டார் வாகனம் ஒன்றிற்காக செயற்திட்டத்தால் ரூபா 191,897 தொகையான எரிபொருள் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் படி, பெறுமதி செரி வரியிலிருந்து வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கொடுப்பனவுகள் விலக்களிக்கப்பட்டிருந்த போதிலும், வீதி முன்னெற்ற வெலைகள் மற்றும் ஆலோசனை செவைகள் என்பவற்றின் மீதான கொடுப்பனவாக செயற்திட்டத்தால் ரூபா 278 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 6.4 காணிச் சுவீகரிப்பு

ஐந்து வீதிகளின் புனரமைப்பின் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற நோக்கங்களிற்காக அதன் மீது செய்யப்பட்ட ரூபா 2,678 மில்லியன் தொகையான மொத்த ஒதுக்கீட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,310 மில்லியன் கூட்டுத் தொகையான இழப்பீடுகள் செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, கெஸ்பேவ – பாமன்கடை வீதி முன்னேற்றத்திற்காக 2,681 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 வரை ரூபா 257.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இழப்பீட்டுக் கொடுப்பனவுகளிற்காக 2,270 காணத் துண்டுகளே தகுதியுடையதாக இருந்தன என அவதானிக்கப்பட்டது. 284 காணித்துண்டுகளிற்கு மாத்திரமே கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், காணிச் சுவீகரிப்பிற்கான அழப்பீட்டுக் கொடுப்பனவுகளிலுள்ள தாமதத்தினால் வட்டியாக ரூபா 2.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாதிரிச் செவ்வையின் படி, பாமன்கடை - கெஸ்பேவ வீதியின் பிலியந்தலை உப வீதிக்காக சுவீகரிக்கப்பட்ட 103 காணித் துண்டுகள் இழப்பீட்டு கொடுப்பனவுகளிற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 91 காணித்துண்டுகளிற்காக ரூபா 89 மில்லியன் தொகையான இழப்பீடு மாத்திரம்

செலுத்தப்பட்டிருந்தது. அவற்றின் மீது செலுத்தப்பட்ட வட்டி தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) காணிச் சுவீகரிப்புக்கான இழப்பீடு மீதான செலவினம் நியதிச்சட்ட கொடுப்பனவுகள், காணி மற்றும் மீள்குடியேற்றக் குழு (எல்ஏஆர்சீ) கொடுப்பனவுகள் முற்பணக் கொடுப்பனவுகள், மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் போன்றவாறு புறம்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்டத்தின் காணிப் பிரிவால் கணக்காய்விற்காக வழங்கப்பட்ட ஆவணங்களுடன் செலவினங்களை இணக்கம் செய்ய முடியவில்லை.